Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு).

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 4-1-1947 மார்கழி 20உ { மலர் 13

## சில்லறைக் காசு

("காலி மணிபர்ஸ்")

### "மாம்பவுலி" கொண்டுபோங்கள்!

டில்லியில் அரசியல் நிர்ணயசபை நாடகம் ஆரம்பமாயிற்று! ஆரிய நடிகர்கள் நன்றாய்த்தான் நடித்தார்கள்! அல்லாடி அய்யர், கோபாலசாமி அய்யங்கார் இருவரும் நன்றாய்ப் பேசியிருக்கிறார்கள் என்பதைக் கூறிவிட்டது, 'ஹிந்து" பத்திரிகை! இங்கிருந்து ரத்தினசாமி, ஸர் ஷண்முகம், வி ஆர். ரெட்டி ஆகிய அரசியல் நிபுணர்களுக்குப் பதிலாகப் போன திராவிடர்கள் பேச்சு எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேன். அய்யரும் அய்யங்காரும் பேசியது 2-பத்திக்குக் குறையாமல் வெளிவந்திருந்தது. திராவிடர்களில் மற்றவர்கள் பேசினார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. முனிசாமி பிள்ளை மட்டும் பேசியதாகப் பத்து வரி வந்திருக்கிறது. அதைவிட அவர் செய்த முக்கியமான வேலை—தக்ளியில் நூல் நூற்றுக்கொண்டிருந்தாராம்!

சென்னை சட்டசபையில் வைத்யநாதய்யர் தக்ளியில் நூற்றார்; முனிசாமி பிள்ளை அரசியல் நிர்ணய சபையில் நூற்றார்! அ. நி. சபை மெம்பர்களுக்கெதிரில் எழுதுவதற்காகப் பலகை இருக்கும்போது கைராட்டினத்தை எடுத்துக்கொண்டு போகாமல் 'தக்ளி'யை மட்டும் கொண்டு போனதுபற்றி எனக்கு வருத்தம்!

அடுத்தக் கூட்டம் 27-நாட்கள் கழித்து ஆரம்பமாகும்! இம்மாகாணத்திலிருந்து செல்லும் காங்கரஸ் திராவிடர்களும், இதர வகுப்பார் பிரதிநிதிகளும்—ஏதோ இரண்டொருவர் தவிர—அரசியல் திட்டங்களையும் நுணுக்கங்களையும் கையால் கூடத் தீண்டிப்பாராத அப்பாவிகள்! அடுத்தக் கூட்டத்தில் அங்கேபோய் எப்படிப் பொழுது போக்குவது என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்?

டில்லியில் "மாம்பவுலி" என்று கூவி விற்பவர்கள் பலர் வருவார்கள். டில்லி சர்க்கார் பணிமனைக்கு அருகிலுள்ள மரத்தடியில் பெரும்பாலும் காணப்படுவார்கள்! "மாம்பவுலி" என்றால் என்னமோ என்று நினைத்துப் பயந்துவிடவேண்டாம், நம் காங்கரஸ் அங்கத்தினர்! கிட்டே நெருங்கலாம். அரையணாக் கொடுத்துவிட்டுக் கையை ஏந்தினால் 10-12 வேர்க்கடலை விழும். அதுதான் "மாம்பவுலி!" அதைக்கொஞ்சம் 'கற'மாக வாங்கிக்கொண்டுபோய் அ. நி. சபையில் வைத்துக்கொள்ளலாம் தூக்கம் வரும்போது ஒவ்வொன்றாய் நெறித்துச் சாப்பிடலாம், தலைவர் காதில் விழாமல்!

"அங்கே ரொம்ப கிராக்கியாயிருக்கிறதய்யா! அதெல்லாம் தின்னு பார்த்துட்டேன்! காலணா மணிக்குக் கூடப் போதவில்லை," என்று யாரோ ஒரு அ. நி. சபை அங்கத்தினர் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது! அப்படியானால் இங்கிருந்து போகும்போதே 'லக்கேஜ் வானில்' ஆளுக்கு ஒரு மூட்டை வறுத்த வேர்க்கடலையைக் கொண்டு போகலாம் என்பது என் யோசனை!

சபைத் தலைவர் கடலையை நெறிக்கும் ஓசையைக் கேட்டுவிட்டால் "ஆர்டர், ஆர்டர்! மத்ராஸி!" என்று கூச்சல் போட்டாலும் போடுவார்! ஆகையால் வெளியேயே உடைத்து, பருப்பாகவே கொண்டு போகலாம்! அ. நி. ச. அங்கத்தினர் வாய் அசைபோடும்போது பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கலாம்!

"மகாத்மா காந்திக்குப் பிரியமான வேர்க்கடலையைத்தானே சாப்பிடுகிறோம்! வெள்ளையன் சொல்லிக் கொடுத்த 'பிஸ்கெட்' தின்றால்தானே தப்பு? முனிசாமி பிள்ளைமட்டும் தக்ளியில் நூற்றாரே!" என்று கேட்டால் சபைத்தலைவர் மூச்சுவிட மாட்டார்!

வேர்க்கடலை ஜீரணமாகாது என்று நினைப்பவர்கள் "ராம்துன்—ஏக்—தோ!" "ராம் துன்-ஏக்-தோ!" என்று வாய்க்குள்ளேயே சொல்லிக்கொண்டிருக்கலாம்! இதில் இன்னொரு லாபமுமிருக்கிறது! "இந்தப் பேர்வழி ஏதோ அபூர்வமான பிரசங்கத்துக்காக இரகசிய ஒத்திகை நடத்துகிறார் போலிருக்கிறது!" என்று மற்ற அங்கத்தினர்களும் பயந்து கொண்டிருப்பார்கள்! இப்படியே கொஞ்சநாள் காலங்கழித்துவிட்டால், பிறகு அ. நி. சபையே கலைந்து போனாலும் போகும்! அப்புறந்தான் புரட்சி வரப்போகிறதாமே! அதிலே 'ஆகஸ்ட்தனம்' செய்துகொள்ளலாம்!

o o

### அடுத்த இடம் மடப்பள்ளி!

தாழ்த்தப்பட்ட தோழர்கள் உள்ளே செல்வதற்காகக் கோவில் கதவுகள் திறந்துகொண்டேயிருக்கின்றன! "தீண்டத்தகாத ஜாதியார் உள்ளே நுழைந்தால் என் உயிர்போய்விடும்" என்று சொல்லிவந்த சாமிகள் அனை

களின் மனைவி மக்கள் எல்லாம் இன்று வாய் திறக்கவில்லை; அதாவது, பேசாமலிருக்கின்றனர்! இதிலிருந்து என்ன தெரிகிறது? கோவிலின் புனிதத்தன்மை, தீட்டு, சம்ப்ரோக்ஷணம்—எல்லாம் பூசாரி கூட்டம் கூலிவந்தது பச்சைப்புளுகு என்பது உறுதியாகிவிட்டது!

இனி, அடுத்த பாடத்தையும் படிக்கவேண்டாமா? அய்யர், அய்யங்கார் மட்டுமே மணியடிப்பானேன்? அவர்கள் மட்டுமே பரம்பரையாய்ச் சிலைகளைத் தொடுவானேன்? அவர்கள் மட்டுமே மடப்பள்ளி வேலை செய்வானேன்? தாழ்த்தப்பட்ட திராவிடர்களும் மற்றத் திராவிடர்களும் இக்காரியங்களைச் செய்தால் என்ன மோசம் வந்துவிடும்? ஆரிய மொழியான சமஸ்கிருதத்திலேயே அர்ச்சனை செய்வானேன்? அவரவர் தாய்மொழியிலேயே சொல்லிக் கொள்ளக்கூடாதா?

இவையெல்லாம் மட்டும் போதுமா? இத்தனை வருஷங்களாய்த் திராவிடர் சாமி தூக்கினர்; அர்ச்சகர் மேலே அமர்ந்திருந்தனரே! இனிமேல் அர்ச்சகர் "சாமி" தூக்க வேண்டாமா? வேத பாராயண கோஷ்டி சாமிக்கு முன்னே செல்லலாமா? ஏன் செல்லவேண்டும்?

இந்த விஷயங்களிலெல்லாம் நமது "புதிய பக்தர்கள்" (தாழ்த்தப்பட்டவர்கள்) இனிமேல் கவனஞ் செலுத்த வேண்டும்.

இந்தச் சமயத்தில் முதன் முதல் இந்நாட்டில் கோவில் நுழைவுக் கிளர்ச்சியைத் தொடங்கிய வைக்கம் வீரரைப் பற்றியும் (பெரியார்), முதன் முதல் இங்கிலீஷிலும் தமிழிலும் சட்டபூர்வமான ஆராய்ச்சிப் புத்தகம் எழுதிய நாகர்கோவில் சிதம்பரம் பிள்ளையைப்பற்றியும் தமிழ் நாட்டார் நினைக்காமலிருக்க முடியாது ஆனால் தமிழர் எல்லாருக்குமே நன்றியறிதல் என்னும் குணம் எங்கேயிருக்கிறது?

## பிறப்பு

தோழர் வி. எஸ். ரங்கசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கு 11-11-46ல் ஓர் ஆண் மகவு பிறந்து குழந்தைக்கு இளங்கோவன் என்று பெயரிட்டதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## ஜக்ஜீவன்ராம்! திரும்பிப்போ!

இடைக்கால சர்க்காரின் தொழில் மந்திரி தோழர் ஜக்ஜீவன்ராம் அவர்கள் 27-12-46காலை சென்னைக்கு வந்ததும் புகைவண்டி நிலையத்தில் தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தைச் சார்ந்த 1000க் கணக்கான மக்கள் கருப்புக் கொடி பிடித்தும் 'ஜக்ஜீவன்ராம் திரும்பிப்போ' 'எங்கள் தலைவர் அம்பேத்கார்' என்று இடிமுழக்கம் செய்தும் தங்கள் வெறுப்பைக் காட்டிக்கொண்டனர்.

பின்னர் 27-12-46 இரவு சென்னையிலிருந்து கோவைக்குச் செல்லும் வழியில் ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்ஷனில் தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த தலைவர்களும் தோழர்களும் 'ஜக்ஜீவன்ராம் திரும்பிப்போ' 'அம்பேத்கார் எங்கள் தலைவர்' 'அம்பேத்கார் வாழ்க!' 'பெரியார் வாழ்க!' என்ற கோஷங்களைக் கிளப்பினர். இவர்கள் செய்த கிளர்ச்சியின் காரணமாக ஜக்ஜீவன்ராமை வரவேற்க ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்ஷனில் காங்கரஸ்காரர்களால் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளெல்லாம் வீணாயின.

பின்னர் கோவையிலும் இதே மாதிரி எதிர்ப்பிருக்கும் என்பதையுணர்ந்து கோவைக்கு நான்கு மைல்களுக்கப்பாலுள்ள ஓர் குக்கிராமத்தில் ஒருவருக்கும் தெரியாமல் கூட்டம் ஏற்பாடு செய்தனர். —ஒரு நிருபர்

(இதே மாதிரியாக ஹரிஜன் என்ற அடிமைச் சின்னத்தைத் தாங்கியிருக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தில் தோன்றிய ஜக்ஜீவன்ராமுக்குத் தமிழ் நாடெங்கும் எதிர்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் தேசிய ஏடுகள் இவ்வெதிர்ப்பைப்பற்றி வெளிப்படுத்துவதில்லை. —ஆ-ர்)

## தோலியில் பெரியார்

தோலி திராவிடர் கழக முதலாவது ஆண்டுவிழா 18-12-46ல் நடந்தது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஆண்டுவிழா பகல் 2மணிக்குப் பேட்டைத் தோழர் சோமு அவர்கள் தலைமையில் தொடங்கியது. அதிராம்பட்டினம் ராமுலு, நாகை காளியப்பன், சாமிநாதன் ஆகிய தோழர்கள் பேசியபின்னர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 2-மணி நேரம் திராவிடர் கழகத்தைப் பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டம் மாலை 7மணிக்கு முடிவுற்றது. இடைவிடாது மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் மக்கள் மழையில் நனைந்துகொண்டு 10 மைல்களுக்கப்பாலுள்ள கிராமங்களிலிருந்து 1000க்கணக்கில் விழாவிற்கு வந்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கிசான்கள்.


வெளிவந்துவிட்டது!

அறிவின் அனல் மூச்சு . சிந்தனையின் செந்தீ!

அறியாமை அந்தகாரத்துக்கும், புரோகித புல்லுருவித் தனத்துக்கும், சுரண்டும் செயலுக்கும் சமாதிகட்ட

# கோயில்களை மூடுங்கள்!

கோரநாதன் எழுதியது

மனிதன் மனிதனாக வாழ, விபசாரமும், வேற்றுமையும் குறைய

இன்னும்..........ஏன்! படித்துப்பாருங்கள்!

விலை அணா எட்டு. வியாபாரிகளுக்கு 15% கழிவு உண்டு

—: விவரங்களுக்கு :—

சாந்தி நிலையம், துறையூர்-திருச்சி

ஓ. எம். சுப்பிரமணியன்



# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

கார்ல் ஹென்ரிச் மார்க்ஸ் 1818ம் வருடம் மே மாதம் 5ந்தேதி பிறந்தார். இவர் பிறந்த ஊர் ஜர்மனியிலுள்ள டிரிவஸ் என்பது. இவரது குடும்பத்தினர் வக்கீல் தொழிலிலும் நீதி பரிபாலனத் தொழிலிலும் சிறந்தவர்களாய் விளங்கிவந்தனர்: இவர் பிறப்பதற்குச் சிறிது காலத்துக்கு முன்தான் உலகத்திலிருந்த பெரிய குழப்பங்கள் மறைந்தன. ஒரு காலத்தில் ஆட்டங்கொடுத்திருந்த முடியாட்சி மீண்டும் வேரூன்றி தழைக்க ஆரம்பித்தது. இங்கிலாந்தில் இயந்திரங்களினால் நூல் நூற்று ஆடைகள் தயாரிக்கப்பட்டன. இதைக்குறித்து இங்குள்ள ஜனங்கள் பெரிய அதிசயமாகக் கருதி வந்தார்கள். இயந்திரத்திலே தயாரிக்கப்பட்ட ஆடைகள் ஏராளமாக விலையாகிக்கொண்டு வந்தன. ஆனால் அவைகள் டிரிவஸ் நகரத்துக்கு எட்டவில்லை. ஜர்மனியிலுள்ள ஏனைய நகரங்களைப்போல இதுவும் ஒரு சிறு பட்டினம். வாழ்க்கை சாதாரணமாக நடந்து வந்தது. தனித்தனியாக ஒவ்வொரு வகுப்பாரும் இருந்து வந்தனர். அந்தந்த வகுப்பார்களுக்குத் தகுந்த மரியாதைகள் அளிக்கப்பட்டு வந்தன.

மார்க்ஸின் தந்தை ஒரு யூத வகுப்பைச் சேர்ந்தவர். கிறிஸ்தவராக மதம்மாறினவர். இவரது குடும்பத்துக்கும் மதம் மாறாத இவரது குடும்பத்தார்களுக்கும் வழக்கம்போல் பொறாமை இருந்தே வந்தது. ஆனாலும் இவரது குடும்பத்துக்கும் பொதுவாக வழக்கறிஞர்களுக்குச் செலுத்தப்படும் மரியாதை ஒரு சிறிதும் குறைவுபடவேயில்லை.

இவர்களுக்குப் பிரிவிக்கவுன்சிலில் வொன்வெஸ்ட் பாலன் என்ற ஒரு ஆத்ம நண்பர் இருந்தார். அவர் பாரசீக தேசத்து அதிகாரி. அவர் எப்பொழுதும் ஷேக்ஸ்பியர் நூல்களையும் ஹோமர் நூல்களையும் வாசித்துக்கொண்டேயிருப்பார். தன்னுடைய நண்பர்களின் புதல்வர்களையும் அத்தகைய புத்தகங்களையே வாசிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுவார். தம்முடைய நண்பரின் புத்திசாலிப் பிள்ளையாக விளங்கும் மார்க்ஸுடன் தத்துவ சாஸ்திரத்தைப்பற்றிச் சம்பாஷிப்பார். இவர் தமது அழகிய புதல்வி ஜென்னியை மார்க்ஸுக்கு விவாகம் செய்து கொடுப்பதென்று நினைத்து வந்தார். இவ்விஷயம் 1836ல் கார்ல், பெர்லின் சர்வகலா சாலைக்குப் போகும்வரை யாருக்கும் தெரியாது.

## கல்வி கற்றலும் நூல் எழுதுதலும்

கலாசாலையில் சரித்திரம், பூகோளம், இலக்கியம் தத்துவ சாஸ்திரம், ராஜநீதி சாஸ்திரம் முதலியவைகளில் முதல்தரமாக விளங்கினார். அவர் எதையும் ஆழ்ந்து யோசிக்காதிருக்க மாட்டார். உண்மையை அறியும் ஆசையுடையவர். அவரது இளம்பருவத்தில் யாதொரு குறைவுமில்லாது செல்வமாக வளர்ந்துவந்தார். அவரது கறுத்த மீசையும் கூரிய பார்வையும் அன்புநிறைந்த சொற்களும் யாவர் மனதையும் விட்டு அகலாமலிருந்தன: அவர் ஒரு நீண்ட செய்யுளை இயற்றினார்; அதில் அறிவு நிறைந்த கருத்துக்கள் மலிந்து கிடந்தன. சிறு கதைகளையும் வெளியிட்டார். பின்னால் அவைகள் பயனற்றவை என்று நினைத்து எல்லாவற்றையும் கொளுத்திவிட்டார். மூந்நூறு பக்கங்கள் கொண்ட தத்துவ சாஸ்திர விதிச் சுருக்கமொன்றை எழுதினார். சிலநாள் கழித்துத் தப்பான கொள்கைமீது தத்துவ சாஸ்திரம் கட்டப்பட்டிருக்கிறது என்று முடிவுசெய்து அதையும் எரித்துவிட்டார்.

இவைகள் எல்லாவற்றையும் குறித்து ஒரு வருடம் கழிந்த பிறகு தமது தந்தைக்கு ஒரு சிறு கடிதம் எழுதினார் அதில் ஹெகல் தத்துவ சாஸ்திரத்திலிருந்து ஏதோ தான் கண்டுபிடித்துவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அவரது தந்தை ராபிக்கல் வம்சத்தைச் சேர்ந்தவர். எதையும் பகுத்தறிவோடு நோக்குபவர். தனது புத்திரனது கடிதம் கிடைத்ததும், விஷயத்தையறிந்து, இரவெல்லாம் விழித்திருந்து தனது உடலையும் கெடுத்துக்கொண்டு எழுதி, பின்னால் அவைகளை வீணாக நெருப்பில் கொளுத்துவதைவிட நல்ல தேகாப்பியாசம் எடுத்துக்கொண்டு சந்தோஷமான மனதுடன் தெளிவான புத்தியுடன் அவரது பிரச்சினைகளைத் தீர்க்கும்படி பதில் எழுதினார். இந்த அறிவுரைகளை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தந்தையின் கடிதத்திற்கு மறுப்பு ஒன்று செய்யுளில் எழுதினார். தன் மகனின் எதிர்ப்புக் கடிதங்களை அதிகநாள் பார்க்கும்படி அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை. திடீரென 1836ம் வருஷத்தில் மார்க்ஸின் தந்தை மறைந்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# குடி அரசு

1947 ௵ ஜனவரி 4உ

## தோழர்களே!

தோழர்களே, 1947ம் ஆண்டு தொடங்கிவிட்டது யாருடைய விருப்பு வெறுப்பையும், எவருடைய தயவு தாட்சண்யத்தையும், எப்படிப்பட்டவருடைய போக்கு வரவையும் இலட்சியம் செய்யாமல் ஆண்டுகள் வருவது நடந்துகொண்டே இருக்கின்றது என்பதானது நம் இயக்கத்தின் நடைமுறையை ஞாபகப்படுத்துகிறது.

ஜாதி, மதம், கடவுள், சமுதாயம், அரசியல் துறைகளில் புரட்சி மாறுபாடுகள் ஏற்படவேண்டும் என்று கருதி அதாவது இவைகளில் உள்ள நடப்புகள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று இல்லாமல் அடியோடு அழித்து ஒரே தன்மையானதாக ஆக்கப்பட வேண்டும் என்று போராடத் தோன்றிய ஒரு இயக்கம் சுயமரியாதை இயக்கமாகும்.

இந்த நாட்டில் தீண்டாமை ஒழிப்புச் சங்கம் இருக்கலாம் ஆனால் அது ஜாதியை ஒழிக்கச் சம்மதிக்காது, ஜாதி ஒழிப்பு சங்கம் இருக்கலாம். ஆனால் அது மதத்தை ஒழிக்க சம்மதிக்காது, அதுபோலவே இந்த நாட்டில் மதம் ஒழிப்பு சங்கம் இருக்கலாம். ஆனால் அது மதத்துக்கு ஆதாரமான கடவுள்களையும், கடவுள் சம்பந்தமான முரண்பட்ட உணர்ச்சிகளையும் மூடநம்பிக்கைகளையும் ஒழிக்க சம்மதிக்காது, கடவுள் சம்பந்தமான முரண்பட்ட தன்மை மூடநம்பிக்கை ஆகியவைகளை ஒழிக்கும் சங்கம் இருக்கலாம். ஆனால் அது சம்பந்தமான சாஸ்திர ஆதாரங்களை ஒழிக்கச் சம்மதிக்காது. அன்னிய ஆட்சியை ஒழிக்கும் சங்கமாக இருக்கலாம் ஆனால் அது அன்னிய பேதங்களை ஒழிக்கும் சங்கமாக இருக்காது.

ஆனால் சுயமரியாதை இயக்கமானது எது சரியோ, அதாவது பகுத்தறிவுக்கு எது சரி என்று பட்டதோ அதைத்தவிர மற்றவைகள் எவை ஆனாலும் அவைகளை அழிப்பதில் துணிவுடன் கவலையுடன் உண்மையுடன் பணியாற்றி வருகிறது, இந்தப் பணிதான் ஆண்டுகள் எப்படித் தோன்றிக்கொண்டே வருகின்றனவோ அதுபோல் நடந்தேறி வருகின்றது.

சுயமரியாதை இயக்கம் 1925 26ல் தோன்றியது எனலாம். தோன்றிய காலம் முதல் இது வரை அதாவது இந்த 20 ஆண்டுகளாக அதில் இருந்தவர்கள் எத்தனைபேர்? போனவர்கள் எத்தனைபேர்? புதிதாக வந்தவர்கள் எத்தனை பேர்? என்ற பழங் கணக்கு முதல், புதுக் கணக்கு வரை பார்த்தால் பலபேர்களின் பெயர்கள் மக்கள் கவனத்துக்குத் தென்படலாம். இவர்களில் எதிரிகளானவர்கள் எத்தனைபேர்? பழி தூற்றி விஷமப் பிரசாரம் செய்தவர்கள் எத்தனைபேர்? என்று பார்த்தால் அதிலும் பல பேர்களின் பெயர் ஞாபகத்துக்கு வரலாம். இப்படிப்பட்ட தன்மைகள் தொல்லைகள் இயக்கத்துக்கு இருந்தும் இயக்கம் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்தால் இயக்கம் மறைந்துவிட்டதாகவோ, இயக்க கொள்கைகள் கைவிடப்பட்டு விட்டதாகவோ, திட்டங்கள் சலிப்படையக் கூடியதாகவோ தோல்விக் குறி காணக்கூடியதாகவோ எதுவும் காணப்பெறவில்லை.

இந்தியர்கள் இந்துக்கள் என்பவர்களைப் பொறுத்தவரை மதம் மறைந்துகொண்டு வருகிறது, கடவுள்கள் கரைந்துகொண்டு வருகின்றன. சாதி—சமுதாயம் செத்துக்கொண்டு வருகின்றது, சாஸ்திரங்கள், சாம்பலாகிக்கொண்டு வருகின்றன. ஆனால் இவை வேகமாகச் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அவையாவும் அவ்வவற்றின் ஆட்சிப்பீடத்தில் இருந்து அகன்று செல்ல அடி எடுத்து வைத்துவிட்டன. சில அடி தூரம் நடந்தும் விட்டன.

இஸ்லாமிய சமுதாயம் (முஸ்லிம் லீக்) "நாங்கள் இந்தியர்கள் அல்ல" என்று சொல்லிவிட்டது.

ஆதிதிராவிடச் சமுதாயம் (செட்யூல்ட் வகுப்பு) "நாங்கள் இந்துக்கள் அல்ல" என்று சொல்லிவிட்டது.

திராவிட கழகம் (தங்களைத் திராவிடர்கள் என்று கொள்ளும் சமுதாயம்) "நாங்கள் இந்தியர்களுமல்ல, இந்துக்களுமல்ல" என்று சொல்லிவிட்டது.

ஆகவே சுயமரியாதை இயக்கம் மதம் சமுதாயம் என்பதில் பெரும்பாலோரிடையில் வெற்றி கண்டுவிட்டதென்றே சொல்லலாம்.

சமுதாயபேதங்கள் இன்று இந்தியா முழுவதிலும் அல்லாவிட்டாலும் திராவிடநாடு முழுவதிலும் பல பேதங்கள் ஒழிந்து இரண்டுவித சமுதாய பேதம்தான் இருக்கும்படியான நிலையை வந்து அடைந்துவிட்டது. அது என்னவென்றால் ஒன்று பார்ப்பன சமுதாயம், மற்றொன்று பார்ப்பனர் அற்ற சமுதாயம் என்பது ஆகும்.

இந்தத் துறையில் சுயமரியாதை இயக்கம் நல்ல வெற்றி பெற்றிருப்பதை யாரும் மறுக்க முடியாது என்போம்.

பார்ப்பனர் என்கின்ற சமுதாய பேதம் சில துறைகளில் இருந்துவருவதை நாம் மறுக்க

ரோஜா முத்தையா

வில்லை. ஆனால் அது இன்னும் சிறிது காலத்துக்காவது இருக்கவேண்டியது அவசியம் என்றே கருதுகிறோம்.

நம்முடைய சுயமரியாதை இயக்கத் தொண்டானது பெரிதும் பார்ப்பான் வேறு நாம் வேறு என்கின்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

—பார்ப்பானை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே ஜாதி மத, கடவுள், சாஸ்திர, புராணத் தொல்லையில் இருந்தும், கொடுமையில் இருந்தும் மக்களை மீளவைக்க சுலபமாக முடிகிறது. கோவில்குளம் கொள்ளைகளையும் ஒழிக்க சவுகரியம் ஏற்படுகிறது. ஆகலால் பார்ப்பான் என்கின்ற பிரிவும், பார்ப்பானுக்கு என்று சில தனி உரிமையும் பங்கும் இருப்பது நமது இயக்கத்திற்குத் தடை என்றோ கேடு என்றோ சொல்ல முடியாது. நல்லபடி வேலை செய்யப் பயன்படும். ஆதலால்தான் சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான 1926ம் ஆண்டிற்கும் 1947ம் ஆண்டிற்கும் இடையில் நடந்த காரியங்கள் மாநாடுகள் ஆகியவை இயக்கத்துக்குப் பெருமையும், பாராட்டுதலும், ஒரு அளவு வெற்றியும் ஆகுமே தவிர யார் போனதினாலும் யார் எதிர்த்ததாலும், யார் சேர்ந்ததாலும் குற்றம் குறை கூறக்கூடியதாக ஆகிவிடவில்லை என்று நாம் சொல்லுகிறோம்.

பொருளாதாரத் துறையிலும் சு. ம. இயக்கக் கொள்கை நாட்டில் பலப்பட்டும் ஒரு அளவுக்குச் செல்வாக்குப் பெற்றும் காரியத்திலும் தலைகாட்டியும் வருகிறதே ஒழிய தளர்ந்தோ பின்னமடைந்தோ போய்விடவில்லை.

என்றாலும் இனியும் சுயமரியாதை இயக்கத்திற்கு வேலை இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதற்குச் செய்யவேண்டிய வேலையை விடச் சொல்லவேண்டிய வேலை அதிகம் இருக்கிறது. உதாரணமாகக் கோவிலுக்குள் யாவரும் எல்லா சமுதாயத்தாரும் செல்லவேண்டும் என்று சொன்னதை இன்று பார்ப்பனர்களே எல்லா வகுப்பு மக்களையும் கோவிலுக்குள் அழைத்துப் போக வேண்டியவேலை செய்கிறார்கள். என்றாலும் அதற்கும் மேல் நாம் "ஏன் நாங்களும் சாமி இருக்கும் இடத்திற்குச் செல்லக்கூடாது? ஏன் சாமிக்கு நாங்களும் பூசை படையல் செய்யக்கூடாது?" என்று சொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம். அதுவும் முடிவதாகவே வைத்துக்கொண்டாலும் அதற்கு அப்புறமும் நாம் "சாமிக்கு இந்த மாதிரி உருவம் பூசை படையல் கல்யாணம் முதலிய சடங்கு ஏன்" என்று சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படியாகப் பல காரியங்கள், கருத்துக்கள் ஆகியவைகளை நாமேதான் இன்று இந்த நாட்டில் செய்யவும் சொல்லவும் வேண்டியவர்களாக இருப்பதால் நமக்குச் சுலபத்தில் ஓய்வு கிடைத்துவிடும் என்று சொல்லமுடியாது.

இப்படிப்பட்ட ஒரு புரட்சி இயக்கம் இப்படிப்பட்ட எதிரிகள் இடையில் இருந்து ஆண்டுகள் தோன்றுவதுபோல் தோற்றமளித்துத் தனது பணியை ஆற்றிவருகின்றது, என்றும் ஆற்றி வரும்.

ஆகவே பகுத்தறிவும் முற்போக்கு உணர்ச்சியும் உள்ள தன்னலமற்ற இளைஞர்கள் வேகத்தில் கலந்து வெற்றியின் பங்கை அடையவேண்டியதே 947ம் ஆண்டு தோன்றியதின் படிப்பினையாகும்.

## பிளக்கும் கொள்கை முற்றுகிறது!

இந்தியாவைப் பிளப்பதா, என்று ஹிந்துக்கள் ஸ்தாபனமாகிய காங்கரஸ் திகைத்துக் கொண்டிருக்கும்போதே வெளிநாடுகளில் பிளக்கும் உணர்ச்சி மும்முரமாக வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது. சில நாட்களுக்குமுந்தி, பிரிட்டனிலுள்ள வேல்ஸ் மாகாணத்தை இங்கிலீஷ் வேல்ஸ் என்றும், வெல்ஷ்க்காரரின் வேல்ஸ் என்றும் பிரிப்பதுபற்றிய பிரச்னை கிளம்பியிருப்பதாகச் செய்தி வந்தது.

இப்போது பாலஸ்தீனத்தைப் பிளப்பது பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது. அங்குள்ள "யூதர்களும் அராபியரும் உடன்பட்டுப் போகவேண்டும் என்ற ஆசையைப் பிரிட்டன் விட்டுவிடவேண்டும் என்றுதான் தோன்றுகிறது. வேறு வழியில்லாவிட்டால், பாலஸ்தீனத்தை அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே பிரிவினை செய்து, அவரவர் விஷயங்களை அவரவர்களே பார்த்துக் கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும்" என்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை எழுதுகிறது.

பாலஸ்தீனம் அராபியர்களுக்குச் சொந்தமான நாடுதான். ஆனால் இந்தியாவில் எவ்வாறு போக்கிடமில்லாத ஆரியர் குடியேறினார்களோ அதைப்போலவே, வேறு போக்கிடமில்லாத லம்பாடிக்கூட்டம் போன்ற யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறிவிட்டனர். இப்போது பாலஸ்தீனத்தில் சகல உரிமைகளையும் கேட்கின்றனர், இங்குள்ள ஆரியர்களைப் போலவே! அதுமட்டுமல்ல. தர்மகர்த்தா (பொது

காப்பு) பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் பிரிட்டிஷாரையும் கொல்லக்கூடிய துணிவு பெற்றுவிட்டனர். யூதர்கள் செய்யும் காரியங்களை நாம் ஆதரிக்கவில்லையென்றாலும், இந்த மாதிரி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாட்டுப் பிரிவினையைத் தவிர வேறு வழியில்லை என்பதையாவது பிரிட்டன் உணரவேண்டும் என்பதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். ஆரியர்களைப் போலவே யூதர்களுக்கும் சொந்த நாடில்லை. ஐரோப்பாவை விட்டுத் துரத்தப்படுகின்றனர். இங்கிலாந்திலும் இடமில்லையென்கின்றனர். அமெரிக்காவுக்கும் வரக்கூடாது என்கின்றனர். அவர்களை வேறு எங்கேதான் குடியேறச் செய்வது; எல்லா நாடுகளுக்கும் தொல்லை கொடுத்துவரும் ஒரு தனி நாட்டில் ஒதுக்கிவிடுவது தானே சிறந்த வழி?

இந்நாட்டு ஆரியர் நிலையும் அதுதான். இவர்களுக்கும் சொந்தநாடு என்பது கிடையாது. இவர்களை எங்கு விரட்டினாலும் அங்கே தொல்லைதான் ஏற்படும். யாரும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். ஆகையால்தான் இவர்களுக்குத் தனி நாட்டைப் பிரித்துக் கொடுத்து, ஆரியஸ்தான் அல்லது ஹிந்துஸ்தான் என்ற பகுதியில் ஒதுக்கி வைத்துவிடுவது நல்லது என்று நாம் கூறுகிறோம். தோழர் ஜின்னாவும் கூறுகிறார். ஆரியஸ்தான் என்ற ஹிந்துஸ்தான் பிரிந்ததும், திராவிடஸ்தானும் பாக்கிஸ்தானும் தனித்தனி நாடுகளாக இயங்கலாம், இயங்கியே தீரும்.

ஐரோப்பாவிலுள்ள சில்லறை நாடுகளை ஒன்றுபடுத்திய பிறகுதான் இந்தியாவிலுள்ள இனங்களையும் ஒன்றுபடுத்த முடியும். ஹிட்லரின் சர்வாதிகாரத்தின் கீழ் ஐரோப்பியச் சிறு நாடுகள் வாயை மூடிக்கொண்டு அடிமைப்பட்டிருந்ததைப் போல, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் 150 ஆண்டு ஆட்சியில் இந்தியாவிலுள்ள இனங்கள் அடிமைப்பட்டுக் கிடந்தன. இதை ஐக்கியம் என்றோ, சகோதரத்துவம் என்றோ கூறுவது தவறு.

இங்கு பிரிட்டிஷ் பிடிப்புத் தளர்ந்ததும், அந்தந்த இனம் தனி ஆட்சி கோருவதைக் காண்கிறோம். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் உள்ளவரையில் தனி இனங்களுக்குச் சுய ஆட்சி கிடைப்பது முடியாத காரியம். பலாத்காரம் ஒன்றுக்குத்தான் பிரிட்டன் பயப்படுகிறதே தவிர நியாயமான கோரிக்கையைச் சமாதான முறையில் கேட்டால் காதில் போட்டுக்கொள்வதேயில்லை. காங்கிரஸ்கட்சி "அஹிம்சை" என்ற போர்வையில் ஆகஸ்டுவேலை செய்த பிறகுதான், "ஆஹா! நாங்கள் போகத்தானே விரும்புகிறோம்" என்கிறார்கள். வெள்ளையர்! யூதர்கள் பிரிட்டிஷ் தளபதிகளைச் சுட்டுக்கொன்றும், சிறைபிடித்தும், சவுக்கால் அடித்தும் தொல்லை கொடுத்த பிறகுதான் யூதர்களுக்குப் பாலஸ்தீனத்தைப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும்" என்று "டைம்ஸ்" பத்திரிகை எழுதுகிறது!

இதனால், நாமும் பலாத்காரம் செய்யவேண்டும் என்று கூறவில்லை. பலாத்காரத்தை விரும்பும் வெள்ளை ஏகாதிபத்தியம் விரைவில் வெளியேற வேண்டும். இதே முயற்சியில் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்திடம் சமாதான முறையிலேயே நம் கோரிக்கையையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இதுவே நமது திட்டம்.

நாட்டைப் பிளப்பதா, என்ற எளனப் பேச்சு இன்று முதல் தரமான மருந்தாக ஏற்பட்டுவிட்டது. இந்த உண்மையைக் காங்கிரஸ்கட்சி உணர்வதற்கு முந்தி, பிரிட்டன் உணர்ந்துவிட்டது குறிப்பிடத்தக்கது

இன்று நிராகிடர்களாகிய பாலஸ்தீன் அராபியர்களை காட்டிலும் ஆபத்தான நிலைமையிலிருக்கிறோம் அவர்களுக்காவது பிரிட்டனின் ஆதரவு ஓரளவேனும் உண்டு. நமக்கு அதுவுமில்லை. நாம் தன்னந்தனியே நம்மவர்களுடனேயே போராட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## சர்க்கார் ஏன் பட்டம் வழங்கவில்லை?

இந்தியர்களுக்கு இனிப் புதிதாக சர், திவான்பகதூர், ராவ்பகதூர், ராவ்சாஹிப்முதலியபட்டங்கள் வழங்கப்போவதில்லை என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கூறிவிட்டது. 1946ம் ஆண்டுவரையில் இந்தியர்களுக்குப் பட்டம் வழங்கிவந்த ஏகாதிபத்தியம் திடீரென்று இனி இந்தியர்களுக்குப்பட்டம் வழங்கப் போவதில்லை என்று ஏன் கூற வேண்டும்?

இந்தியாவென்ற உபகண்டத்திலுள்ள காங்கிரஸ், முஸ்லிம் லீக், திராவிடர் கழகம், (ஜஸ்டிஸ் கட்சி) தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் முதலிய அரசியல் கட்சிகள் வெள்ளையனால் வழங்கப்படும் அடிமைச்சின்னமாகிய பட்டங்களை ஏற்பதில்லை என்று முடிவுசெய்துவிட்டன. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மக்களுள் 100க்கு 99 பேர்களுக்கு மேல் மேற்கூறப்பட்ட அரசியல் கட்சிகளில் ஐக்கியப்பட்டுள்ளனர். எனவே இனி யாருக்குப் பட்டம் வழங்குவது என்று புரியாத காரணத்தால் வெள்ளையர் பட்டம் வழங்குவது என்ற திட்டத்தை அடியோடு கைநழுவ விட்டனர்.

வெள்ளையன் வழங்கும்

ரோஜா முத்தையா

அடிமைச் சின்னமாகிய பட்டங்களுக்கு ஏங்கிக்கிடக்கும் ஏகாதிபத்திய தாசர்களாகிய போலி ஜஸ்டிஸ்கட்சியினரும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஒற்றர்களாய் உள்ள பார்ப்பனர்களும் இனி ஏகாதிபத்திய அடிமைச் சின்னத்தைப் பெற இயலாதே என்று பெரிதும் கவலைப்படுவர். நாட்டிலேயுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் வெள்ளையனின் அடிமைச் சின்னத்தை அறவே புறக்கணித்து, வெள்ளையனையே இந்தியாவைவிட்டு விரட்டுவதற்குத் திட்டமிட்டு கொண்டிருக்கும் நேரத்தில் ஊரார் உழைப்பில் உந்தி வளர்க்கும் ஏகாதிபத்திய தாசர்களுக்கு வெள்ளையன் பட்டம் வழங்கினால் அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே அவமானமானதும் வெட்கரமானதுமாகும். எனவேதான் ஒருவருக்கும் இனிப் பட்டம் வழங்குவதில்லை என்று ஏகாதிபத்தியம் சொல்லிவிட்டது.

இனிமேலாவது ஏகாதிபத்திய ஒற்றர்களாகிய பார்ப்பனர்களுக்கும், தாசர்களாகிய போலி ஜஸ்டிஸ் கட்சியினர்களுக்கும் புத்தி வருமா என்று கேட்கிறோம். புத்தி வந்து, இதுவரையில் தங்களுக்கு ஏகாதிபத்திய அடிமைச் சின்னமாக அளிக்கப்பட்டுள்ள பட்டங்களைத் துறப்பார்களா? இங்ஙனம் செய்யாவிடில் இவர்களின் நிலைமை வருங்காலத்தில் செல்லாத காசின் நிலைமையாகத்தான் முடியும் என்று எச்சரிக்கிறோம்.

## பொதுக்கூட்டம்

5-1-47ல் பெரியார் நாகூர் செல்வார். போகும் வழியில் நாகூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கியதும் காரில் அழைத்துச் செல்லப்படுவார். 9-30 மணிக்குக் கீவளூரில் பெரியாருக்கு வரவேற்பு, 10 மணிக்கு ஆழியூர் திராவிடர் கழக ஆண்டுவிழாவில் சொற்பொழிவு. 11மணிக்குச் சிக்கலில் வரவேற்பு. 2-30 மணிக்கு நாகூர். நாகூரில் 3-30 மணிக்கு ஊர்வலத்திலும் மாலையில் பொதுக் கூட்டத்திலும் பெரியார் கலந்து கொள்வார்.

0 0

8-1-47 புதன்கிழமை மாலை 4-மணிக்கு வெள்ளகோவில் தோழர் ல. அ. கிருஷ்ணப்ப செட்டியார் பேட்டையில் ஈரோடு தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

| | |
|---|---|
| 4-1-47 | விழுப்புரம் |
| 5— | நாகூர் |
| 6— | சீர்காழி |
| 7— | ஈரோடு |
| 8— | வெள்ளக்கோவில் |
| 10— | கோவை அல்லது ஈரோடு |
| 11— | குனூர் |


## பூந்தோட்டம்

(திராவிடர் இயக்க வெளியீடு)

பதிப்பாசிரியர்;
வை. திருநாவுக்கரசு

முதல் மலர் 10-1-47ல்

தலைவர் பெரியார், புரட்சிக்கவிஞர் A. V. P. ஆசைத்தம்பி, இ. இளங்கண்ணன் பி. ஏ. எல். டி: மு. அரசிளங்கோ பி ஏ, "அருவி" ஆகியோரின் கருத்துரைகளுடன், பெரியாரின் அழகிய மூகப்போடு புத்தகம் முழுவதும் ஆர்ட் தாளிலேயே அச்சிடப்பட்டு வெளிவருகிறது.

தனிப்பிரதி 6 அணா
ஏஜண்டுகள் தேவை.

"பூந்தோட்டம்"
அரிசிப்பாளையம், சேலம்,


## பிறப்பு

27-10-46 ஞாயிறன்று தஞ்சை திராவிட கழகத் தலைவர் தோழர் பி. வேணுகோபால் பி ஏ, பி. எல்., அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்குப் பெண்மகவு பிறந்தது. தாயும் சேயும் நலமே. அதன் நினைவாக விடுதலை வளர்ச்சிக்கு 3-ரூபாயும், குடியரசு வளர்ச்சிக்கு 2ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

8-11-46ல் சிறுநாகலூர் திராவிடர் கழகக் காரியதரிசி, தோழர் சே. நந்தகோபால் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் மரகதம், அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்ததின் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகியவற்றிற்குத் தனித்தனியே ஒவ்வோர் ரூபாய் அளிக்கப்பட்டது. தாயும் சேயும் நலம்.

0 0

நன்னிலம் தாலுக்கா ஆலங்குடியில் 20-6-46ல் பெரியார் ஈ. வெ ரா. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட தோழர் டாக்டர் அய்யம்பெருமான் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் ஞானாம்பாளுக்கு 25-10-46ல் ஆண் மகவு பிறந்தது. இதன் நினைவாக விடுதலை, குடியரசு, திராவிடநாடு, திராவிடர் கழக நிதி ஆகியவற்றிற்கு முறையே ஒவ்வோர் ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தான் வெளிவந்தது. இதற்குள் ஆசிரியர்களுக்குள் தகராறு ஏற்பட்டுவிட்டது. இந்த ஒரு வெளியீட்டிலும்கூட மார்க்ஸின் எண்ணற்றகட்டுரைகள் காணப்பட்டன. மேன்ச் செஸ்டரில் எஞ்சல்ஸ் என்ற பெயருடன் விளங்கிய ஒரு இளம் ஜர்மானியர் எழுதிய கட்டுரையும் காணப்பட்டது.

(தொடரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது குடும்பத்துக்குப் பெரிய ஆஸ்தியொன்றும் வைத்துச் செல்லவில்லை. தனது குமாரன் குடும்பத்தைக் காக்க வேண்டிய சகல பொறுப்புகளையும் ஏற்று உயர்ந்த அதிகாரப் பதவியை வகிப்பான் என நம்பியிருந்தார். இந்த எண்ணத்தை மனதில் கொண்டே மார்க்ஸுக்கு அதற்கான கல்வி கற்பித்தார்.

ஆனால், மார்க்ஸ் தன் தந்தையின் எண்ணத்திற்கு மாறாக நீதி சாஸ்திரத்தைத் தவிர மற்ற எல்லா சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தார். தந்தை இறந்தவுடன் நீதி சாஸ்திரத்தைப்பற்றிப் படிப்பதை அறவே ஒழித்துவிட்டார்.

தத்துவ சாஸ்திரங்களைக் கருத்துடன் கற்பதிலேயே கவலையாயிருந்தார். வேத சாஸ்திரியாரான புரூனோபாவர் இவரைத் தத்துவ சாஸ்திரத்தைக் கற்கும்படித் தூண்டிக் கொண்டே வந்தார். இருவரும் சாஸ்திரிய சர்வ கலாசாலையில நிபுணர்களாக விரும்பினார்கள். போன் சர்வகலாசாலையில் பாவர் பேராசிரிய (Prafessor) ராகவும், விரிவுரையாள (Leeturer)ராக விளங்க வேண்டுமென்று விரும்பினார்கள். இருவர்களுடைய எண்ணமும் ஈடேறவில்லை. மார்க்ஸ் 1841 வருடம் தத்துவ சாஸ்திரத்தில் டாக்டர் என்ற பட்டம் பெற்றார். துடிதுடிப்பும் கடுஞ்சொற்கள் உபயோகித்தலும் துருவித் துருவி விசாரணை புரியும் தன்மையுமுடைய இளம் வாலிபர்களை இப்பதவியில் நியமனம்செய்ய பிரஷ்யன் சர்வ கலாசாலை சங்கத்தார் மறுத்துவிட்டனர். இத்துடன் அவரது கேள்விப் பருவம் முடிவடைந்தது. ஹெகலியன் தத்துவ நூலைப்பற்றி விரிவான ஆராய்ச்சி பெற்றார். தன்னுடைய பாலிய ஜீவிய காலத்தில் மக்களின் ஒவ்வொரு வகையான எண்ணங்களைக் குறித்தும் ஆராயப் புகுந்தார். இவ்வாறு ஆராயத் தலைப்பட்டதால்தான அவர் ஹெகலியன் மாணவர்களில் தலைசிறந்தவராக விளங்கலானார். அவர் தத்துவ சாஸ்திரத்தில் தேறியிருந்தும் அந்தத்துறையிலோ, அல்லது வேறெந்தத் துறையிலோ தனது வாழ்க்கையை நிர்ணயிக்கவில்லை. இவரது வாழ்க்கையில் ஹெகலியன் பயிற்சியின்படியே சகல காரியங்களையும் செய்துவந்தார். அவரைப் போலவே நடித்தும் வந்தார்.

## பத்திரிகைத் தொழிலில் ஈடுபடல்

பிரஷ்ய சர்க்கார் இவரை சர்வ கலாசாலையில் நியமனம் செய்ய மறுத்ததாலும் தான் ஏதோ ஒரு வகையில் வாழ்க்கைக்குப் பணம் சம்பாதிக்க வேண்டியவராயிருந்ததாலும் மாதாந்த பத்திரிகைத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார். ரைன் மாகாணத்திலுள்ள லிபரல் கட்சியினர் "ரீனிச் கிட்டங்" என்ற பத்திரிகையை ஆரம்பிக்க யோசித்தனர். 1842ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அப்பத்திரிகை வெளிவந்தது. அது வெளிவந்த நாள்தொட்டு மார்க்ஸ் அதற்குக் கட்டுரை எழுதி அனுப்பிக்கொண்டேயிருந்தார். அக்டோபர் மாதம் இவரே அப்பத்திரிகைக்கு ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார்.

இப் பத்திரிகைத் தொழில் அவரைப் பொருளாதாரப் பிரச்சினையிலும் அரசியல் பிரச்சினையிலும் இழுத்துவிட்டுவிட்டது. அவர் கற்ற கல்வி இவைகளைக்குறித்து ஆராய்வதில் மிகப் பிரயோஜனமாயிற்று. இவரது கவனம் பொருளாதாரத்தில் செல்லலாயிற்று. அதிலும் ரைன் மாகாண சட்டசபையார் மரங்கள் களவு போதலைக் குறித்தும் நிலத்தை சிறுசிறு பாகமாகப் பிரிப்பதைக் குறித்தும் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து தலையங்கம் எழுத நேர்ந்த காலத்தும், மோசேல் பள்ளத்தாக்கு விவசாயிகளின் நிலைமையைப்பற்றி சட்டசபைத் தலைவரோடு தர்க்கம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் வந்த காலத்தும் சுதந்தர வர்த்தகத்துக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று போராட நேர்ந்த காலத்தும் பொருளாதாரத்தைப்பற்றி விரிவாக ஆராய ஆரம்பித்தார். இவைகளை ஆராயுங்காலையில்தான் கல்லூரிக் கல்விமட்டும் இப்பிரச்சினைகளைக் குறித்து அறிய போதுமானதல்ல என உணர்ந்தார். இவரது பத்திரிகை பிரசுரிக்கக்கூடாது என தடைசெய்யப்பட்டபோதுதான் அவரது அரசியல் அறிவு பெருகலாயிற்று.

1843ம் வருஷத்துவக்கத்தில் இவர் தமது பதவியை ராஜீனாமாச் செய்தார். தன்னுடைய தந்தையின் நண்பரான வொன் வேஸ்ட் பாலன் என்பருடைய புத்திரியான ஜென்னி என்பவரை மணம் புரிந்தார். பாரிசுக்குச் சென்றார். அங்கு தன் நண்பராகிய அர்னால்டுரூஜ் என்பரோடு சேர்ந்து புதிய பத்திரிகை நடத்த ஆரம்பித்தார். இவர்கள் வெளியிட்ட பத்திரிகையின் பெயர் "பிராங்கோ-ஜர்மன் வருட புத்தகம்" என்பதாகும். இப்பத்திரிகையில் முதலாவது இதழ் மட்டுந்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.